11th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த டிபரன்ஸை பெர்சனல் பேயாக அரசாங்கம் தான் கொடுக்கும்.

திரு. மா. தண்டாயுதபாணி : தனியார் நடத்துகின்ற பள்ளிகளிலே குறிப்பாக ஆரம்பப் பள்ளிகளிலே சில பள்ளிகளிலே சரியானபடி எல்லாம் நடத்தப்படவில்லை. அந்தப் பள்ளிகளை பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்கள் கேட்டால் கொடுக்கப்படுவதில்லை. தனியார் நடத்துகின்ற அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை பஞ்சாயத்துக் கூட்டமன்றங்களே நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி உயர்நிலைப் பள்ளியைப் பற்றியது. ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தனியார் நடத்துகின்ற பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன் மேற்பார்வை செய்கிறது. தனிப்பட்டவர்கள் பள்ளிகள் நடத்திக் கொண்டிருந்தால் மேலும் ஒரு பள்ளி புதிதாக ஆரம்பிக்க வேண்டுமா என்பது பரிசீலனைக்குப் பிறகுதான் அனுமதி வழங்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : தனியார் பள்ளி நிர்வாகிகளை அழைத்து சர்க்கார் அவர்களிடத்திலே ஆலோசனை கேட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் பள்ளியிலே வேலை செய்யும் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளையும் கலந்து ஆலோசித்தார்களா? சர்க்கார் செய்யும் இந்த முடிவுக்கு அவர்கள் ஒத்துக் கொண்டார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர்களைக் கேட்க வேண்டியதில்லை. ஆசிரியர்களுக்கு எதாவது குறைபாடு இருந்தால் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கலாம்.

திரு. கே. பி. பழனி : ஆரம்பக் கல்வி நிர்வாகம் அத்தனையையும் ஒன்றாகச் சேர்த்து போர்டு ஆஃப் எலிமெண்டரி எஜுகேஷன் என்ற அமைப்பை உருவாக்க அரசாங்கம் தெரிவிக்கலாம். 9-00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தமாதிரி யோசனை ஒன்றும் இல்லை.

* 252 கேள்வி.—**திரு. சீ. சிவசுப்பிரமணியன்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்வி இலாகாவில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பிரசவ விடுமுறை (Maternity leave) சம்பளத்துடன் இரண்டு மாதம் என்றிருப்பதை மூன்று மாதமாக நீட்டிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. ம. கமலநாதன் : மெடர்னிடி லீவை மூன்று குழந்தைகளுக்கு மேலும் பெறக்கூடிய ஆசிரியைகளுக்கு நீடிப்பதில்லை என்று கேரள அரசு முடிவு செய்திருப்பதைப் போல் நம்முடைய அரசாங்கமும் முடிவு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் முக்கூட்டுக்கூட்டத்தில் இந்தமாதிரி யோசனை வந்தது. மூன்று குழந்தைகளுக்கு மேல் நான்காவது பிரசவத்திற்கு மெடர்னிடி லீவ் கொடுக்கக்கூடாது என்ற யோசனை வந்தது. பலர் அதை ஆட்சேபித்தார்கள். நானும் என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன். நான்காவது குழந்தை பிறப்பதற்கு அவர்கள் காரணம் அல்ல. அதற்காக அவர்கள் தண்டிக்கப்படக் கூடாது. மெடர்னிடி லீவு எப்படியும் இருக்கவேண்டும். மெடர்னிடி லீவ் இல்லாமல் வேலை செய் என்று சொல்வது தவறு என்ற கருத்தைச் சொன்னேன். அதுதான் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. சா. கணேசன் : பிரசவ கால விடுமுறை என்பதிலே மூன்று குழந்தைகளுக்கு மேல் ஏற்படுகிற பிரசவமா அல்லது மூன்று பிரசவத்திற்கு மேல் ஏற்படுகிற பிரசவமா? ஒரே பிரசவத்தில் கூட இரண்டு குழந்தைகளைப் பெற்று விடக்கூடும். ஆகவே, குழந்தை அடிப்படையிலா அல்லது பிரசவ அடிப்படையிலா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை, கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை. நான் என்னுடைய கருத்தையும், மத்திய அரசாங்கக் கருத்தையும் சொன்னேன். மெடர்னிடி லீவ் கொடுப்பதைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. மெடர்னிடி லீவ் கொடுக்கிற வரையில், மூன்று குழந்தைகளா அல்லது மூன்று பிரசவமா என்ற கேள்வி எழுவதற்கே இடமில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : கேள்விக் குறிப்பில் ' ஆசிரியர்களுக்குப் பிரசவ விடுமுறை' என்று இருக்கிறது. இந்தப் பிரசவ விடுமுறை ஆசிரியைகளுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் தெரிந்து கொள்ளவேண்டும். சட்டபூர்வமாக 'ஆசிரியர்' என்றால் "ஆசிரியை" யும் சேர்த்துக் கொள்ளப்படும். கான்டெக்ஸ்ட்டைப் பார்த்துப் பொருள் கொள்ளவேண்டும். இது ஆசிரியைகளைத்தான் குறிக்கும்.

கனம் சபாநாயகர் : ஆசிரியர்களும் அப்ளிகேஷன் போட்டால் கொடுப்பார்கள். பிரசவ வேதனை வந்திருக்கிறது என்று ஆசிரியர்கள் அப்ளிகேஷன் போடலாமே. (சிரிப்பு).

* 253 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :**
திரு. சா. ராமசாமி : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்களின் ஓய்வுகால வயதை மாற்றியமைக்க வேண்டுமென்று கோரி ஆசிரியர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அண்மையில் ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?